IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.155/2025

Deposition of Witness for P.W.2

NAME - திரு.சுதாகர்

FATHER NAME - திரு.பெருமாள்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.06.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>குறுக்கு விசாரணை– மனுவின் பேரில்</u>

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் காவல் நிலையத்தில் அழைத்து காவல் நிலையத்திலே கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல, பாரிலேயே வந்து போலிசார் வரைப்படம் வரைந்து என்னை விசாரித்தார்கள். என் மீது சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் ஆள் கடத்தல் வழக்கு . சாரய வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் சரியல்ல. திருவளம் காவல் நிலையத்தில் என் மீது மது பாட்டில்கள் வைத்திருந்ததாக வழக்கு உள்ளது என்றால் சரி. சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் சாரய வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் சரி. நான் பார்வை மகசரில் உள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றும் சாரயா பாட்டில்களை வைத்து விற்பனை செய்து சந்துரு என்பவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்பு எந்த பொருளும் கைபற்ற பட வில்லை என்றால் 12 கட்டை 3 கத்தி 7 கேமரா 2 போக்கஸ் லைட் ஆகியவை போலிசார் பாரிலேயே கைப்பற்றினார்கள். நான் சொல்லுவது போல் எந்த பொருளும் என் முன்பு கைபற்றபடவில்லை என்றும் நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எத்தனை மணிக்கு

நான் கையெழுத்து செய்தேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

<u>A6, 15, 16 தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் கட்டுமான நிறுவனத்தில் சூப்ரைஸராக பணியாற்றுகிறேன். என் வீடு ஏறியூரியில் உள்ளது. என்னுடைய வீட்டில் இருந்து ஒயின்ஷாப் 1 கி.மீ தூரத்தில் உள்ளது. ரபிக் என்பவர் பாரை உடைத்துவிட்டார்கள் என்று சொன்னது பேரில் நானும் ரபிக்கும் போனோம். 29 ம் தேதி காலை 04.30 மணிக்கு எனக்கு தகவல் வந்தது. ரபிக் என்பவர் கூலி வேலை செய்கிறார். ரபிக் ஒயின்ஷாப்பில் வேலை செய்யவில்லை. ரபிக் நானும் கூலி வேலைக்கு அன்று செல்லவில்லை. ஒயின்ஷாப் பக்கத்தில் சுடுகாடு உள்ளது. என்னை ராஜா என்ற போலிசார் விசாரணை செய்தார். ராஜா என்ற போலிசார் என் மீது இதற்கு முன்பு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. நான் ஒயின்ஷாப்க்கு செல்லுமபோது 7,8 போலிசார் அங்கு இருந்தார்கள். சம்பவ இடத்தில் இருந்து சுமார் 600 அடி தூரத்தில் மின் கம்பம் உள்ளது என்றால் சரி. ஒயின்ஷாப் பக்கத்திலே பார் உள்ளது. ஒயின்ஷாப்பில் உள்ளவர்கள் யாரும் அப்பேது இல்லை. போலிசார் தவிற வேறு யாரும் அங்கு இல்லை. ஊர் காரர்கள் ஒயின்ஷாப்பில் வேலை செய்பவர்கள் யாரும் அங்கு இல்லை. பார் மற்றும் ஒயின்ஷாப் அமைந்துள்ள இடம் 50 சென்ட் என்றால் சரி. கிழக்கு மேற்கான பிரதான சாலை மீது 500 மீட்டர் தொலைவில் ஒயின்ஷாப் உள்ளது. வடக்கு தெற்குக்கு கிழக்கு பக்கமாக பார் மற்றும் ஒயின் ஷாப் உள்ளது.ஒயின் ஷாப் அன்று கேட் போட்டு பூட்டப்பட்டு இருந்தது. அந்த சமயத்தில் கேட் திறந்திருந்தது. பார் பக்கத்தில் இருந்து 3 கத்தி போலிசார் கைப்பற்றினார்கள். பாரில் இருந்து 12 உருட்டு கட்டை பார் டேபுள் உடைத்ததை போலிசார் கைப்பற்றினார்கள். போலிசார் பொருட்களை கைபற்றியதிற்கு அங்கேயே என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பொருளை

போலிசார் பாரில் இருந்து எடுக்க முக்க மணிநேரம் ஆனது. கட்டை சவுக்கு மரக்கட்டை. 3 கத்தி இருந்தது அது என்ன குறியீடு உள்ளது என்று நான் பார்க்கவில்லை. போலிசார் என் கண்முன்னாலே கத்தி மரக்கட்டைகள் எடுத்துக்கொண்டு இருந்தார்கள் கேமிராவை நான் பார்த்தேன். பார் முகப்பில் கேமிரா இருந்தது. நான் பார்க்கும்போது பொருட்கள் சிதைந்து இருந்தது என் முன்பாக போலிசார் பொருட்களை கைப்பற்றினார்கள். நான் பார்க்கு செல்லவில்லை என்றும் போலிசார் கேட்டுக் கொண்டதிற்க்கினங்க அ.சா.1 க்கு பவ்விய பட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசாருக்கு கையிருப்பு சாட்சி என்றும் மகசரில் உள்ள கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து போலிசாருக்காக செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 15.06.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),
Vellore